# SS INSTITUTE OF PHARMACY

*(A unit of VS Educational & Charitable Trust)*
Approved by Tamilnadu Government & Pharmacy Council of India, New Delhi.
Affiliated to the Tamilnadu Dr. M.G.R. Medical University,
and The Directorate of Medical Education, Chennai.

**Date: 07.10.2024**

**CIRCULAR**

**Subject: Selection of Alumni Association Office Bearers**

This is to inform that the process for the selection of office bearers for the **Alumni Association Committee** is now open. We invite enthusiastic and dedicated alumni to participate in this important process and contribute to the continued growth and success of our alumni network.

**The positions open for nomination are:**

- President
- Vice President
- Secretary
- Joint Secretary
- Treasure

**Eligibility:**
All registered alumni of SS Institute of pharmacy are eligible to nominate themselves for the above positions.

**Nomination Process:**
Interested candidates are requested to submit their nominations by **19.10.2024**. Nominations can be sent to Mail ID: ssip1718@gmail.com.

**Selection Date:**
The final selection will take place on 21.10.2024 during the upcoming general body meeting.

Your participation and leadership will help strengthen our alumni community and its initiatives.

Yours Truly

SS INSTITUTE OF PHARMACY ★ SANKARI ★

PRINCIPAL,
SS INSTITUTE OF PHARMACY
KUPPANUR (PO), SANKARI (TK)
SALEM - 637301

# MINUTES OF MEETING

**1. Welcome Address**

The meeting commenced with a welcome note by Dr.C.Jothimanivannan, Principal who greeted all the alumni members and thanked them for their presence. The purpose of the meeting—to discuss and finalize the selection of office bearers for the Alumni Association—was outlined.

**2. Agenda Discussion**

The primary agenda of the meeting was:

- Discussion on roles and responsibilities of office bearers.
- Nomination and selection of office bearers for the upcoming term.

**3. Roles and Responsibilities**

Certainly! Here's a concise "Roles and Responsibilities" for each listed position, suitable for internal communication or meeting minutes:

- **President**

  Leads the organization sets overall goals and direction, presides over meetings, represents the organization externally, and ensures smooth functioning of all departments.
- **Vice President**

  Assists the President in all duties, takes charge in the President's absence, and supports the implementation of organizational plans and initiatives.
- **Secretary**

  Maintains records, prepares meeting agendas and minutes, handles correspondence, and ensures proper communication across the organization.
- **Joint Secretary**

  Assists the Secretary in administrative tasks takes over duties in their absence, and helps coordinate events and communication efforts.

SS INSTITUTE OF PHARMACY SANKARI

PRINCIPAL,
SS INSTITUTE OF PHARMACY
KUPPANUR (PO), SANKARI (TK)
SALEM - 637301

- **Treasurer**

  Manages the organization's finances, maintains accurate financial records, prepares budgets, and ensures transparency in all financial dealings.

**4. Nominations and Selection**

Nominations were invited from members for each post. After a fair and transparent discussion/election process, the following were selected:

| Position | Name of Office Bearer |
|---|---|
| President | Mr.Shaffiulla |
| Vice President | Mr.Abdul azim |
| Vice President | Mr.Harivishwa |
| Secretary | Ms.Arthi.A |
| Joint Secretary | Mr.D.Arun kumar |
| Joint Secretary | Ms.M.Deepasree |
| Treasurer | Mr.S.Arun |

**5. Future Plans and Suggestions**

The newly formed committee shared a few preliminary ideas:

- Organizing an annual alumni meet.
- Creating a mentorship program for current students.
- Strengthening the alumni database and communication.

Suggestions from the members included:

- Hosting virtual meets for overseas alumni.
- Establishing a Dedicated Alumni Networking Platform

**6. Closing Remarks**

The meeting concluded with a vote of thanks by Mrs.M.Vanitha, expressing gratitude to all attendees and encouraging active participation in upcoming alumni activities.

PRINCIPAL.
SS INSTITUTE OF PHARMACY
KUPPANUR (PO), SANKARI (TK)
SALEM - 637301

# SS INSTITUTE OF PHARMACY

*(A unit of VS Educational & Charitable Trust)*
Approved by Tamilnadu Government & Pharmacy Council of India, New Delhi.
Affiliated to the Tamilnadu Dr. M.G.R. Medical University,
and The Directorate of Medical Education, Chennai.


The following members were the office bearers.

| S.No | Name | Designation | Signature |
|---|---|---|---|
| 1. | Mr.Shaffiulla | President | [signature] |
| 2. | Mr.Abdul azim | Vice President | [signature] |
| 3. | Mr.Harivishwa | Vice President | [signature] |
| 4. | Ms.Arthi.A | Secretary | [signature] |
| 5. | Mr.D.Arun kumar | Joint Secretary | [signature] |
| 6. | Ms.M.Deepasree | Joint Secretary | [signature] |
| 7. | Mr.S.Arun | Treasurer | [signature] |

SS INSTITUTE OF PHARMACY ★ SANKARI ★

PRINCIPAL,
SS INSTITUTE OF PHARMACY
KUPPANUR (PO), SANKARI (TK)
SALEM - 637301

# ALUMNI REGISTRATION BY LAW

படிவம் – I
**(தமிழ்நாடு சங்கப்பதிவு சட்ட விதி 27/1975)**

**அனுப்புதல்**

எஸ்.எஸ் மருந்தியல் கல்லூரி முன்னாள் மாணவர் சங்கம், சேலம் மேற்கு
நிறுவனர் & முதல்வர்,
சங்ககிரி, சேலம்-637301.

**பெறுதல்**

சங்கங்கள் பதிவாளர்
மாவட்டப்பதிவாளர் அலுவலகம்,
சேலம் மேற்கு.

அய்யா,

1. எங்களுடைய சங்கத்தின் பெயர் **எஸ்.எஸ் மருந்தியல் கல்லூரி முன்னாள் மாணவர் சங்கம், சேலம் மேற்கு** என்பதாகும். இச்சங்கம் **21-10-2024** தேதியில் தொடங்கப்பெற்றது.
2. இச்சங்கத்தின் நோக்கம் மற்றும் விதிகளின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
3. இச்சங்கப்பதிவிற்கு உண்டான கட்டணம் ரூ.5100/-இ செலுத்த தயாராக உள்ளேன்.
4. இச்சங்கத்தில் நான் உறுப்பினரும் ஆவேன்.
5. நான் இச்சங்கத்தின் துணை விதிகளை பதிவு செய்ய குழுவினரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள தலைவர் ஆவேன். ஆகவே இச்சங்கத்தினை பதிவு செய்து கொடுத்து சான்றிதழ் வழங்கிட வேண்டுமாய் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.
6. நாங்கள் அனைவரும் சேர்ந்து **எஸ்.எஸ் மருந்தியல் கல்லூரி முன்னாள் மாணவர் சங்கம், சேலம் மேற்கு** என்ற பெயரில் சங்கம் பதிவு செய்து பதிவு எண் பெறுவதற்கான விண்ணப்பம் அளித்துள்ளோம். எங்கள் பதிவிற்கு முன்பாக, இந்த பெயரிலோ அல்லது இதனை ஒத்த பெயரிலோ வேறு ஏதேனும் சங்கம், சங்கம் பதிவிற்காக தாக்கல் செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்டிருந்தால் சங்கப் பதிவு **சட்டப்பிரிவு 9-ன் படி** சங்கப்பதிவாளர்/ மாவட்டப்பதிவாளர் அவர்களின் ஆலோசனையின் பேரில் நாங்கள் சிறிது பெயர் மாற்றம் செய்யவும், மேலும் சங்கப்பதிவுச் சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு சங்கப்பதிவாளர்/ மாவட்டப்பதிவாளர் எடுக்கும் அனைத்து முடிவுகளுக்கும் முழுமனதுடன் சம்மதிக்கின்றோம் எனவும் இதன் மூலம் உறுதியளிக்கிறோம்.
7. எதிர்வரும் காலங்களில் எங்கள் சங்கத்தின் மீது எவ்விதமான பிரச்சினைகளோ, புகார்களோ ஏற்படாவண்ணம் செயல்படுவோம் எனவும், அவ்வாறு ஏற்படும்பட்சத்தில் சங்கப்பதிவுச் சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு சங்கப்பதிவாளர் / மாவட்டப்பதிவாளர் எடுக்கும் அனைத்து முடிவுகளுக்கும் முழுமனதுடன் சம்மதிக்கின்றோம் எனவும் இதன் மூலம் உறுதியளிக்கிறோம்.

இடம் : சங்ககிரி.

இப்படிக்கு
தலைவர்

PRINCIPAL.
SS INSTITUTE OF PHARMACY
KUPPANUR (PO), SANKARI (TK),
SALEM - 637301

## எஸ்.எஸ் மருந்தியல் கல்லூரி முன்னாள் மாணவர் சங்கம், சேலம் மேற்கு அமைப்பு குறிப்பு

| | | |
|---|---|---|
| 1. சங்கத்தின் பெயர் | : | எஸ்.எஸ் மருந்தியல் கல்லூரி முன்னாள் மாணவர் சங்கம்,சேலம் மேற்கு. |
| 2. சங்கத்தின் முகவரி | : | NH 544, S.F.NO.213<br>எஸ்.எஸ் மருந்தியல் கல்லூரி<br>மஞ்சக்கல்பட்டி, குப்பனூர், சங்ககிரி,<br>சேலம்-637301. |
| 3. சங்கம் தொடங்கிய நாள் | : | 21-10-2024 |
| 4. சங்க அலுவலக நேரம் | : | காலை 10 மணி முதல் மாலை வரை |
| 5. சங்கத்தின் பதிவு அலுவலக எல்லை | : | மாவட்டப் பதிவாளர், சேலம் மேற்கு. |

**6. சங்கத்தின் நோக்கம் :**

1. நம் கல்லூரியில் பயின்ற முன்னாள் மாணவ மாணவியர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தல் இதற்காக கலந்தாய்வு கூட்டங்கள் நடத்தி சிறந்த தொழில் நிறுவனங்களில் வேலை வாய்ப்பைத் தேடி தருதல்.
2. நம் கல்லூரியில் பயின்ற முன்னாள் மாணவ மாணவியர் ஒன்று கூடி கருத்தரங்கள் நடத்தி தங்களின் மேன்மையான கருத்துகளை விளக்கு வித்து செயல்படுத்துதல்.
3. முன்னாள் மாணவ-மாணவியர்களின் செயல் திறனை மேம்படுத்திட ஆண்டு கூட்டங்கள் நடத்தி இதன் மூலம் செயலாக்கப் பணிகளை எடுத்துரைத்தல்.
4. முன்னாள் மாணவ-மாணவியர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு பாடுபடுதல்.
5. முன்னாள் மாணவ-மாணவியர்களின் எதிர்கால உயர் கல்விக்கு வழிகாட்டுதல்.
6. முன்னாள் மாணவ-மாணவியர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை ஆசிரியர்கள் தீர்த்து வைத்து வழிகாட்டுதல்.
7. அரசின் உயர் கல்வித் திட்டங்களை முன்னாள் மாணவ மாணவியர்களுக்கு எடுத்துரைத்தல்.
8. அரசுத்துறை, தனியார் துறை, அயல்நாடுகளில் பணி அமர்வு, வெளிநாட்டு தொழில் அமைப்புகள் ஆகியவற்றில் முன்னாள் மாணவ-மாணவியர்கள் பணி ஆற்றிட போதிய பயிற்சி வகுப்புகள், கலந்தாய்வு கூட்டங்கள் மற்றும் நேர்காணல்கள் ஆகியவற்றை நடத்துதல்.
9. எவ்வித அரசியல் கட்சியையும் சார்ந்ததல்ல.
10. எவ்வித இலாப நோக்கமும் இன்றி பொது நல நோக்கத்தோடு செயல்படு

PRINCIPAL.
SS INSTITUTE OF PHARMACY
KUPPANUR (PO), SANKARI (TK),
SALEM - 637301

எஸ்.எஸ் மருந்தியல் கல்லூரி முன்னாள் மாணவர் சங்கம், சேலம் மேற்கு என்ற சங்கத்தின் முதல் நிர்வாகம் தற்காலிமாக கீழ்க்கண்டவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | உறுப்பினர் பெயர் | முகவரி | தொழில் | வகிக்கும் பதவி |
|---|---|---|---|---|
| 1 | க.ஷபியுல்லா | எரிக்கரைத் தெரு, வடசிறுவள்ளூர், பாண்டலம் P.O விழுப்புரம் -606402 | மருத்துவக் குறியீட்டு முறை | தலைவர் |
| 2 | ப.ஹரிவிஷ்வா | 13/73-1, பனமரத்துப்பட்டி, அடிக்கரை, சேலம்-636204 | மருந்தாளர் | துணைத் தலைவர் |
| 3 | அ.அப்துல் அஜிம் | 1/18B கோட்டை,பாளையங் கோட்டை, கடலூர் - 608701 | மருந்தாளர் | துணைத் தலைவர் |
| 4 | அ.ஆர்த்தி | ஆர்.அண்ணாமலை, முருகன் கோவில் தெரு, சதாபுதூர் சங்கராபுரம் விழுப்புரம்- 606206 | மருந்தாளர் | செயலாளர் |
| 5 | து.அருண் குமார் | டி. துரைசாமி, நடுத்தெரு, உப்பூர் சின்னசேலம், விழுப்புரம்- 606209 | மருந்தாளர் | இணைச் செயலாளர் |
| 6 | மு.தீபாஸ்ரீ | எம்.முத்துக்குமார், 99 ஏ, ஆத்துகாடு, கோரிமேடு, சேலம்-636008 | மருந்தாளர் | இணைச் செயலாளர் |
| 7 | சா.அருண் | சாமுவேல், கோச்சிகுட்டை பண்ணைக்கிணார், புதுப்பாளையம், உடுமலைப்பேட்டை, திருப்பூர் | குறியீட்டாளர் | பொருளாளர் |

PRINCIPAL,
INSTITUTE OF PHARMACY
SANKARI (TK)

கீழே கொடுக்கப்பட்டுள்ள நாங்கள் அனைவரும் எஸ்.எஸ் மருந்தியல் கல்லூரி முன்னாள் மாணவர் சங்கம், சேலம் மேற்கு என்ற சங்கத்தின் 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச்சட்டம் மற்றும் 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு விதிகளின் கீழ்ப் பதிவு செய்ய விரும்பி இரு சாட்சிகள் முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளோம்.

| வ.எண். | உறுப்பினர் பெயர் | முகவரி | தொழில் | வகிக்கும் பதவி | கையொப்பம் |
|---|---|---|---|---|---|
| 1 | க.ஷபியுல்லா | எரிக்கரைத் தெரு, வடசிறுவள்ளூர், பாண்டலம் P.O விழுப்புரம் -606402 | மருத்துவக் குறியீட்டு முறை | தலைவர் | [signature] |
| 2 | ப.ஹரிவிஷ்வா | 13/73-1, பனமரத்துப்பட்டி, அடிக்கரை, சேலம்-636204 | மருந்தாளர் | துணைத் தலைவர் | [signature] |
| 3 | அ.அப்துல் அஜிம் | 1/18B கோட்டை,பாளையங்கோட்டை, கடலூர் - 608701 | மருந்தாளர் | துணைத் தலைவர் | [signature] |
| 4 | அ.ஆர்த்தி | ஆர்.அண்ணாமலை, முருகன் கோவில் தெரு, சதாபுதூர் சங்கராபுரம் விழுப்புரம்- 606206 | மருந்தாளர் | செயலாளர் | [signature] |
| 5 | து.அருண் குமார் | டி. துரைசாமி, நடுத்தெரு, உப்பூர் சின்னசேலம், விழுப்புரம்- 606209 | மருந்தாளர் | இணைச் செயலாளர் | [signature] |
| 6 | மு.தீபாஸ்ரீ | எம்.முத்துக்குமார், 99 ஏ, ஆத்துகாடு, கோரிமேடு, சேலம்-636008 | மருந்தாளர் | இணைச் செயலாளர் | [signature] |
| 7 | சா.அருண் | சாமுவேல், கோச்சிகுட்டை பண்ணைக்கிணார், புதுப்பாளையம், உடுமலைப்பேட்டை, திருப்பூர் | குறியீட்டாளர் | பொருளாளர் | [signature] |

[signature]
PRINCIPAL.
SS INSTITUTE OF PHARMACY
SANKARI (TK).

எங்கள் முன்னிலையில் இன்று ________________ ல் கையொப்பமிடப்பட்டது.

சாட்சிகள் :

1. ப. நந்திதா

2. மனிஷா.

கையொப்பம் :

PRINCIPAL,
SS INSTITUTE OF PHARMACY
KUPPANUR (PO), SANKARI (TK),
SALEM - 637301

## எஸ்.எஸ் மருந்தியல் கல்லூரி முன்னாள் மாணவர் சங்கம், சேலம் மேற்கு

### துணை விதிகள்

| | | |
|---|---|---|
| 1. சங்கத்தின் பெயர் | : | எஸ்.எஸ் மருந்தியல் கல்லூரி முன்னாள் மாணவர் சங்கம்,சேலம் மேற்கு. |
| 2. சங்கத்தின் முகவரி | : | NH 544, S.F.NO.213,<br>எஸ்.எஸ் மருந்தியல் கல்லூரி,<br>மஞ்சக்கல்பட்டி, குப்பனூர்,<br>சங்ககிரி, சேலம்-637301. |
| 3. சங்கம் தொடங்கிய நாள் | : | 21-10-2024 |
| 4. சங்க அலுவலக நேரம் | : | காலை 10 மணி முதல் மாலை 5 வரை |
| 5. சங்கத்தின் பதிவு அலுவலக எல்லை | : | மாவட்டப் பதிவாளர், சேலம் மேற்கு |

**6. சங்கத்தின் நோக்கங்கள் :**

1. நம் கல்லூரியில் பயின்ற முன்னாள் மாணவ மாணவியர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தல் இதற்காக கலந்தாய்வு கூட்டங்கள் நடத்தி சிறந்த தொழில் நிறுவனங்களில் வேலை வாய்ப்பைத் தேடி தருதல்.
2. நம் கல்லூரியில் பயின்ற முன்னாள் மாணவ மாணவியர் ஒன்று கூடி கருத்தரங்கள் நடத்தி தங்களின் மேன்மையான கருத்துகளை விளக்கு வித்து செயல்படுத்துதல்.
3. முன்னாள் மாணவ-மாணவியர்களின் செயல் திறனை மேம்படுத்திட ஆண்டு கூட்டங்கள் நடத்தி இதன் மூலம் செயலாக்கப் பணிகளை எடுத்துரைத்தல்.
4. முன்னாள் மாணவ-மாணவியர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு பாடுபடுதல்.
5. முன்னாள் மாணவ-மாணவியர்களின் எதிர்கால உயர் கல்விக்கு வழிகாட்டுதல்.
6. முன்னாள் மாணவ-மாணவியர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை ஆசிரியர்கள் தீர்த்து வைத்து வழிகாட்டுதல்.
7. அரசின் உயர் கல்வித் திட்டங்களை முன்னாள் மாணவ மாணவியர்களுக்கு எடுத்துரைத்தல்.
8. அரசுத்துறை, தனியார் துறை, அயல்நாடுகளில் பணி அமர்வு, வெளிநாட்டு தொழில் அமைப்புகள் ஆகியவற்றில் முன்னாள் மாணவ-மாணவியர்கள் பணி ஆற்றிட போதிய பயிற்சி வகுப்புகள், கலந்தாய்வு கூட்டங்கள் மற்றும் நேர்காணல்கள் ஆகியவற்றை நடத்துதல்.

PRINCIPAL.
... OF PHARMACY

**11. சங்க அலுவல் முறை:**

சங்க அலுவல்கள் அனைத்தும் நிர்வாகக் குழு உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படும்.

**12. நிர்வாகக் குழு:**

1. நிர்வாகக் 'குழு' என்பது சங்கத்தினை நிர்வகிக்கும் சிறப்புத் குழுவாகும்.

2. நிர்வாகக் குழு என்பது ஒரு தலைவர், இரண்டு துணைத்தலைவர், ஒரு செயலாளர், இரண்டு இணைச் செயலாளர், ஒரு பொருளாளர் ஆக மொத்தம் எழு உறுப்பினர்களைக் கொண்டதாகும்.

3. நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பதவிக் காலம், தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகள் பதவி வகிப்பார்கள். இவர்கள் அனைவரும் பொதுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு பொதுக்குழு தீர்மானத்தின்படி நியமனம் செய்யப்படுவார்கள்.

4. நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மீண்டும் பதவிக்குப் போட்டியிடலாம்.

5. நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எவரேனும் பதவியிலிருந்து விலக விரும்பினால் தனது பதவி விலகல் மனுவினை தலைவருக்கோ, துணைத்தலைவருக்கோ, செயலாளருக்கோ, துணைச் செயலாளருக்கோ மனுவினை சமர்ப்பிக்கலாம். நிர்வாகக் குழு விலகலை ஏற்றுக்கொண்டால், சம்மந்தப்பட்ட உறுப்பினர் பொறுப்பினை இதர நிர்வாகக் குழு உறுப்பினரிடம் உடன் ஒப்படைக்க வேண்டும்.

6.நிர்வாகக் குழு கூட்டம் குறைந்தபட்சம் மாதம் ஒரு முறை கூட்டப்படும். இதற்கான அறிவிப்பு நிர்வாகக் குழு உறுப்பினர்கட்கு 7 நாள்கள் முன்னதாக அனுப்பி வைக்கப்படும். நிர்வாகக் குழு கூட்டத்துக்கு குறைந்தபட்சம் ஐந்து உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் முன்னிலையாக வேண்டும். முன்னிலையாகாத பட்சத்தில் கூட்டம் அடுத்த 10 நிமிடங்கட்கு தள்ளி வைக்கப்படும். தள்ளிவைத்து நடத்தப்படும் கூட்டத்துக்கு உறுப்பினர் நிர்ணயிக்கப்பட்ட குறைவெண் (Quorum) அவசியமில்லை.

PRINCIPAL
SS INSTITUTE OF PHARMACY,
KUPPANUR (PO), SANKARI (TK),
SALEM - 637301

**13. பொதுக்குழுக் கூட்டம்:**

**அ. ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டம்:**

ஆண்டுக்கு ஒரு முறை சங்கத்தின் ஆண்டு பொதுக்குழுக்கூட்டம் சங்க நிதியாண்டு முடிவடைந்த நாளிலிருந்து ஆறு மாதங்கட்குள் செப்டம்பர் 30-க்குள் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதிக்கக் கூட்டப்படும்

1. சங்கத்தின் ஆண்டு அறிக்கையின் மீது விவாதித்தல்.
2. சென்ற நிதியாண்டின் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் மீது விவாதித்து அங்கீகரித்தல்.
3. வரும் நிதியாண்டுக்கான வரவு, செலவுகள் செய்வது குறித்து விவாதித்தல்.
4. வரும் நிதியாண்டு கணக்குகளை தணிக்கை செய்ய தணிக்கையாளர் அல்லது தணிக்கையாளர்கள் நியமனம் செய்தல்.
5. சிறப்புத் தீர்மானம் நிறைவேற்ற உத்தேசிக்கப் பட்டிருப்பின், நிறைவேற்றல் மற்றும்
6. இதரதீர்மானங்கள் நிறைவேற்றல்.

**ஆ. அசாதாரண பொதுக்குழுக் கூட்டம்:**

நிர்வாகக் குழு வேண்டும் போது அசாதாரண பொதுக் குழுவினைக் கூட்டலாம். மற்றும் சங்கத்தின் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர் என்ன நோக்கத்திற்காக அசாதாரண பொதுக்குழு கூட்டம் கூட்டப்பட வேண்டும் என்பதை மனுவில் குறிப்பிட்டு கையொப்பமிட்டு நிர்வாகக் குழுவிற்கு அனுப்பினால், அம்மனு கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் நிர்வாகக் குழு அசாதாரண பொதுக்குழுவினைக் கூட்டுதல் வேண்டும். அவ்வாறு நிர்வாகக் குழு பொதுக்குழுவினைக் கூட்டவில்லையாயின், மனு அளித்தவர்களே அவர்களில் ஒருவரை இதற்கென நியமனம் செய்து 21 நாட்களுக்குள், முன்னறிவிப்பை அனைத்து உறுப்பினர்கட்கும் அனுப்பி அசாதாரண பொதுக்குழுக் கூட்டத்தினைக் கூட்டலாம்.

**இ. அறிவிப்பு:**

அனைத்துப் பொதுக்குழுக் கூட்டம் குறித்த அறிவிப்பு கூட்டம் நடக்கும் நாளுக்கு 21 நாள் முன்னதாக, அனைத்து உறுப்பினர்கட்கும் அனுப்பி வைக்கப்படும். அறிவிப்பின் நகல் ஒன்று சங்க அலுவலகத்தில் அறிவிப்பு பலகையிலும் ஒட்டி வைக்கப்படும்

பாராட்டுக் கூட்டங்கள், இரங்கல் கூட்டங்கள் பொது அறிவிப்பின் மூலம் உடன் நடத்தலாம். 21 நாட்கள் முன் அறிவிப்பு தேவையில்லை.

**ஈ. கோரம்:**

பொதுக்குழு கூட்டத்துக்கான கோரம் சங்க உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கையாகும். கூட்ட நேரத்தின்போது மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் கலந்து கொள்ளாத சூழ்நிலையில் கூட்டம் அடுத்த 15 நிமிடங்கட்கு தள்ளி

PRINCIPAL
SS INSTITUTE OF PHARMACY
KUPPANUR (PO), SANKARI (TK)
SALEM - 637301

வைக்கப்படும். தள்ளி வைக்கப்பட்டு நடத்தப்படும் கூட்டத்துக்கு கோரம் அவசியமில்லை.

**14. சிறப்புத் தீர்மானம்:**

1. சிறப்புத் தீர்மானம் என்பது அதற்கென கூட்டப்படும் பொதுக்குழு கூட்டத்தில் ஆஜரான ஓட்டுரிமைப் பெற்ற உறுப்பினர்களில் நான்கில் மூன்று (3/4) பங்கு உறுப்பினர்களின் ஆதரவின் பேரில் நிறைவேற்றப்படும் தீர்மானமாகும். ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்திலும் சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப்படும்.

பொதுக்குழுக் கூட்டத்திற்கான அறிவிப்புடன் நிறைவேற்ற இருக்கும் சிறப்புத் தீர்மான வரைவு (Draft Special Resolution) மற்றும் சிறப்புத் தீர்மானம் ஏன் நிறைவேற்றப்பட உள்ளது என்பதற்கான விளக்கக் குறிப்பு (Explanatory note) 21 நாள் முன்னதாக உறுப்பினர்கட்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

2. சிறப்புத் தீர்மானம் கீழ்க்கண்ட விவரங்களுக்காக நிறைவேற்றப்பட வேண்டும்.

(i) சங்கத்தின் நோக்கங்களை பொருளாதார அடிப்படையிலும், புதிய முன்னேற்ற வழிகளிலும் அடைய தேவையான நோக்கங்களைச் சேர்க்க, நீக்க அல்லது மாற்றவும்;

(ii) சங்கத் தனிநிலைச் சட்ட விதிகளை திருத்த, நீக்க, மாற்றிடவும்;

(iii) சங்கத்தின் பெயரினை மாற்றவும்;

(iv) சங்கத்தினை கலைக்கவும்

(v) சங்கத்தினை இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சங்கங்களாக பிரிக்கவும்; மற்றும்

(vi) இதே நோக்கத்துக்காக செயல்பட்டுவரும் மற்றொரு சங்கத்தினையும் இச்சங்கத்தினையும் ஒன்றாக இணைக்கவும்.

**15. நிர்வாகக்குழு உறுப்பினர்களின் பணிகள் :**

தலைவர் — எல்லா சங்கக்குழு கூட்டங்களிலும் மகாசபை சிறப்பு பொதுக்குழு கூட்டங்களிலும் தலைமை வகிக்க வேண்டியது மற்றும் சங்கத்தின் செயல்பாடு குறித்து தேவையான ஆலோசனைகள் வழங்குதல்.

துணைத்தலைவர் — தலைவர் செய்யும் அனைத்து காரியங்களுக்கும் ஒத்துழைப்பு நல்குதல், சங்க வளர்ச்சிக்காக பாடுபடுதல், தலைவர் இல்லாத காலங்களில் நிர்வாகக்குழுவின் முடிவின்படி எவரேனும் ஒருவர் அவருடைய பணியை மேற்கொள்ளுதல்.

PRINCIPAL.
SS INSTITUTE OF PHARMACY
KUPPANUR (PO), SANKARI (TK)
SALEM - 637301

செயலாளர் — சங்க வரவு, செலவு கணக்குகளை அதற்கென்று ஏற்பட்ட புத்தகத்தில் நிகழ்ச்சியை பதிவு செய்து மேற்படி சங்க உறுப்பினர்களால் கையொப்பம் பெறுதல், அனைத்துப் பதிவேடுகளையும் பராமரிப்பு செய்து வருதல், சங்கச் செயல்பாடுகளுக்கு தேவையான அனுமதி பெற்று பொருளாளரிடம் இருந்து தொகை பெற்று செலவிடுதல், சங்க செயல்பாடுகளுக்கு உறுதுணையாக இருத்தல், இச்சங்கம் சம்பந்தமான நீதிமன்ற வழக்குகளில் செயலாளர் நேரில் தோன்றி முன்னின்று நடத்துதல்.

இணைச்செயலாளர் — செயலாளர் செய்யும் அனைத்து காரியங்களுக்கும் ஒத்துழைப்பு நல்குதல், சங்க வளர்ச்சிக்காக பாடுபடுதல், செயலாளர் இல்லா காலங்களில் நிர்வாகக்குழுவின் முடிவின்படி எவரேனும் ஒருவர் அவருடைய பணியை மேற்கொள்ளுதல்.

பொருளாளர் — சங்கத்தின் அனைத்துச் சொத்துக்களையும் , நிதிகளையும் பொறுப்புடன் பாதுகாத்து வருவதுடன் சங்கத்தின் செலவுகளுக்காக வேண்டிய தொகையை நிர்வாகக்குழு தீர்மானிக்கின்றபடி சங்கத்தின் செயலாளருக்கு கொடுப்பதாகும்.

**செயற்குழு மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள்:**

i) மாதந்தோறும் நடைபெறும் செயற்குழு மற்றும் நிர்வாகக்குழு கூட்டத்தில் கலந்துக் கொள்ளுதல்.

ii) சங்கத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானம் பற்றி கருத்து மற்றும் ஆட்சேபனை தெரிவித்தல்.

iii) சங்க உறுப்பினர்களின் குறைகளை நிர்வாகக் குழுவினரிடம் கூறி நிறைவேற்றுதல்.

iv) சங்கத்தின் நலத்திட்டங்களை வகுத்தல்.

v) சங்க நிர்வாகிகளும் மற்றும் நிர்வாககுழு உறுப்பினர்களும் பொதுநலன் சம்மந்தப்பட்ட காரியங்களுக்கு நகர், வட்ட, மாவட்ட, மாநில அதிகாரிகளை சந்தித்து விளக்கம் பெறலாம். இம்மாதிரியான சந்திப்புகளின் விபரங்களை தலைமை நிர்வாகிகளுக்கு தெரிவிக்க வேண்டும்.

**16. ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் சங்கங்களின் பதிவாளர் வசம் கோர்வைக்குத் தாக்கல் செய்தல்:**

சங்கங்களின் பதிவாளர் வசம் கோர்வைக்குத் தாக்கல் செய்ய வேண்டிய ஆண்டு அறிக்கைகள், உறுப்பினர்கள்/நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மாற்றம் குறித்த படிவம் 7

PRINCIPAL.
SS INSTITUTE OF PHARMACY
KUPPANUR (PO), SANKARI (TK)
SALEM - 637301

மற்றும் படிவங்கள் 8, 9, சிறப்புத் தீர்மானங்கள் ஆகியவற்றினை 'செயலாளர்' கோர்வைக்கு (File) தாக்கல் செய்வார்.

**17. சங்கக் கணக்குகள் மற்றும் தணிக்கை:**

1. சங்கத்தின் நிதியாண்டு ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 1-ஆம் நாளில் கணக்குகள் தொடங்கப்பட்டு அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 31-இல் முடிக்கப்படும்.

2. சங்கத்தின் அனைத்து கணக்குப் பதிவேடுகளையும் 'பொருளாளர் பராமரித்து வருவார்.

3. சங்கக் கணக்குகளை தணிக்கை செய்ய தணிக்கையாளர்/ தணிக்கையாளர்கள் பொதுக்குழுக் கூட்டத்தில் நியமனம் செய்யப்படுவார்கள்.

**18.சங்கத் தனி விதிகள், மற்ற அறிக்கைகள் உறுப்பினர்கட்கு வழங்கல்:**

சங்கத்தின் தனி விதிகள் நகலோ அல்லது வரவு - செலவு அறிக்கை நகலோ அல்லது இருப்பு நிலைக் குறிப்பு (Balanced sheet) நகலோ வேண்டும் உறுப்பினர் அதற்கான மனுவினையும் நகல் ஒன்றுக்கு கட்டணமாக ரூ.1/-ஐ பொருளாளரிடம் அளித்து பெற்றுக் கொள்ளலாம்.

**19. சங்க விதி மீறல் நடவடிக்கை:**

சங்கத்தின் நோக்கத்திற்கு மாறாகவோ அல்லது சங்கத்தின் தனிநிலைச் சட்ட விதிகளுக்கு மாறாகவோ அல்லது சங்கப் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் விதத்திலோ எந்த உறுப்பினராவது செயல்பட்டால் அத்தகைய உறுப்பினருக்கு விளக்கம் அளிக்கக் கோரும் அறிவிப்பு அனுப்பி அவர் மீது தகுந்த நடிவடிக்கையினை நிர்வாகக் குழு மேற்கொள்ளும்.

**20. சங்கத்தின் நிதி மற்றும் வைப்பீடு:**

சங்கத்தின் நிதி சங்கப் பெயரில் வங்கி/வங்கிகளில் சேமிப்பு அல்லது நடப்புக் கணக்கு ஆரம்பித்து அதில் வைப்பீடு செய்யப்படும். மேற்படி வங்கி கணக்கினைச் செயலாளர் மற்றும் பொருளாளரின் கூட்டுக் கையொப்பத்தின் பெயரில் இயக்கப்படும்.

**21. பிரிவு 25-இன் படி சங்க நிதி ஒதுக்கீடு:**

தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் பிரிவு 25-இல் குறிப்பிட்ட காரணத்துக்காக (உறுப்பினர்களுக்கு மிகையூதியமாகவோ (Bonus) பங்கு ஆதாயத் தொகையாகவோ) நிதியேதும் தனியாக ஒதுக்கப்பட்ட மாட்டாது.

PRINCIPAL,
INSTITUTE OF PHARMACY
(PO), SANKARI (TK)
...7301

**22.சங்கத்தின் அன்றாட அலுவல் செலவுகள் மற்றும் பணியாளர்கள் நியமனம்**

சங்க அமைப்பு விதிகள் அவைகளை தமிழ்நாடு சங்க பதிவு சட்டம் 27/1975 க்கு முரண்பாடில்லாத வகையில் சங்க நிர்வாகம் சம்மந்தமாக அவ்வப்போது விதிகளை நிர்ணயித்தல்.

1.சங்கத்தின் செலவுகளுக்காக வேண்டிய தொகை செயலாளர், பொருளாளர் அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். நிர்வாக குழு அனுமதியில்லாமலேயே எந்த ஒரு மாதத்திலும் ரூ.500/- வரை சங்கத்திற்கு செலவு செய்ய செயலாளருக்கு அதிகாரம் உண்டு (ரூபாய் ஐநூறு வரையில் மட்டும்) அதிக செலவு ஏற்பட்டால் அடுத்த நிர்வாகக்குழு கூட்டத்தில் செயலாளர் அங்கீகாரம் பெறவேண்டும். பொருளாளர் எந்த தேதியிலும் சங்கத்தின் செலவுகளுக்காக வேண்டிய ரூ.750/-(ரூபாய் எழுநூற்று ஐம்பது) வரையிலும் ரொக்கமாய் வைத்திருக்கலாம். அதற்கு மேற்பட்ட தொகையை நிர்வாகக்குழு தீர்மானிக்கின்ற தேசிய வங்கிகளில் டெபாசிட் செய்து வைக்க வேண்டும். சங்க நிதியினை வங்கியில் செலுத்தவும், வங்கியிலிருந்து பெறவும், போருளாலருடன் தலைவர் / செயலாளர் கூட்டாக கையொப்பமிட்டு நிதியினை கையாள வேண்டும்.

2. சங்கத்தின் பணிகளை கவனிக்க பணியாளர்கள் தேவைப் பட்டால், சங்கத்தில் உறுப்பினரல்லாத வெளி நபர்களை நிர்வாகக்குழு பணிக்கு நியமனம் செய்து, அவர்களின் பணி நிபந்தனை மற்றும் ஊதியத்தினை நிர்ணயம் செய்ய அதற்கு அதிகாரம் உண்டு.

**23. சங்கப் பதிவேடுகள் பார்வையிடல்:**

சங்கத்தின் உறுப்பினர் பதிவேடு, நிர்வாகக் குழு கூட்ட நிகழ்ச்சி குறிப்பேடு, பொதுக்குழு கூட்ட நிகழ்ச்சி குறிப்பேடு மற்றும் அனைத்து கணக்குப் பதிவேடுகளையும் உறுப்பினர்கள் சங்க அலுவலக நேரத்தில் கட்டணமின்றி பார்வையிடலாம்.

**24. உறுப்பினர்களின் பதிவேடு :**

சங்கத்தின் சங்க உறுப்பினர்களின் பெயர், முகவரி, தொழில் ஆகிய விபரங்களுடன் கூடிய சங்க உறுப்பினர்களின் பதிவேடு (ரிஜிஸ்டர் ஆப் மெம்பர்ஸ்) ஒன்று வைக்கப்பட்டிருக்கும். அதில் உறுப்பினர்களை சேர்த்தல், நீக்கல் போன்ற விபரங்கள் இதில் அப்போதைக்கப்போதே மேற்கொள்ளப்பட வேண்டும்.

உறுப்பினர்களின் பதிவேடு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம் விதி 27/1975 ல் குறிப்பிட்டுள்ள படிவம் எண்.6 ன் படி இருக்கும் உறுப்பினர்களின் மாற்றம் பற்றிய விபரங்கள் அதாவது சேர்த்தல், நீக்கல் ஆகியவற்றை மகாசபை தீர்மானத்துடன் தமிழ்நாடு

PRINCIPAL.
SS INSTITUTE OF PHARMACY
KUPPANUR (PO), SANKARI (TK).

சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் விதி 17(2) ல் குறிப்பிட்டுள்ள படிவம் 7 ன்படி மாற்றம் மேற்கொள்ளப்பட்ட 90 நாட்களுக்குள் சங்க பதிவாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

சங்கத்தின் விதிகளுக்கு எந்த ஒரு உறுப்பினராவது விரோதமாக ஈடுபட்டால் அவரை கண்டிக்க நிர்வாககுழுவுக்கு உரிமைகள் உண்டு.

**25. நிகழ்ச்சிக்குறிப்பு :**

சங்கத்தின் நிர்வாகக்குழு கூட்டம் பொதுக்குழு கூட்டம் ஆகியவற்றில் நடைபெறும் எல்லா நிகழ்சிகளும் இப்பதிவேட்டில் இடம் பெறுதல் வேண்டும். மேற்படி நிகழ்ச்சிக்கு குறிப்புகள் அந்தந்த கூட்டத்திற்கு தலைமை வகித்த தலைவரோ அல்லது அதற்கு அடுத்த கூட்டத்திற்கு தலைமை வகித்த தலைவரோ கையொப்பம் செய்யப்பட வேண்டும்.

மேற்கண்ட பதிவேடுகள் அனைத்தும் சங்கத்தின் அலுவலக நேரத்தில் எந்த ஒரு உறுப்பினரும் கட்டணம் ஏதுமின்றி பார்வையிடும் பொருட்டு சங்கத்தின் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் பிரதி வருடம் செப்டம்பர் மாதம் 30 ம் தேதிக்குள் கூட்டப்பட வேண்டும்.

**26. சங்கத்தில் வைக்கப்படவேண்டிய கணக்குப் பதிவேடுகள் :**

தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம் 27/1975ன் விதி 18ல் குறிப்பிட்டு உள்ளவாறு ரொக்கம் செலவுகள் பற்றிய புத்தகம், ரசீது புத்தகம், வவுச்சர் கோப்பு உறுப்பினர் வாரியான இனம் வாரியான எல்லா வகையான தனித்தனியாக மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட வரவுகள், செலவுகள் பற்றிய பேரேடு மற்றும் வரவுகள் பட்டுவாடா பற்றிய மாதாந்திர பதிவேடு ஆகியவை சங்கத்தில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**27. சங்க வரவு செலவு அறிக்கை :**

சங்கத்தின் நிதி ஆண்டு முடிவுற்றதும் சங்கத்தின் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட வரவு செலவு கணக்குகள் ஐந்தொகை கணக்கு ஆகியவை சங்கத்தால் நியமிக்கப்பட்ட தணிக்கையாளரால் தணிக்கை செய்யப்பட்டு சங்க நிதியாண்டு முடிவுற்ற ஆறு மாதங்களுக்குள் பொதுக்குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட வேண்டும். மேற்படி பொதுக்குழு கூட்டம் நடந்து முடிந்த ஆறு மாதத்திற்குள் அங்கீகரிக்கப்பட்ட சங்க வரவு செலவுகள் கணக்குகள் ஐந்தொகை கணக்குகள் மற்றும் அறிக்கை ஆகியவையும் மேற்படி நிதி ஆண்டின் முடிவில் இருந்து
சங்க உறுப்பினர்களின் பட்டியலையும் மேற்படி நிதியாண்டில் சங்கம் நல்ல முறையில் இயங்கி வந்தது என்பதற்கான உறுதிமொழியையும் மாற்றங்கள் இருப்பின் படிவம் 7ன் (90 நாட்களுக்குள்) மூலமாகவும் சேர்த்து சங்க பதிவாளர் அவர்களுக்கு அனுப்பிவைத்து புதுப்பித்ததற்கான அத்தாட்சி ரசீதுகள் பெற வேண்டும்.

PRINCIPAL,
SS INSTITUTE OF PHARMACY
KUPPANUR (PO), SANKARI (TK),
SALEM - 637301.

**28. சங்க நிதி :**

சங்கத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு நன்கொடைகள் மூலமும் சந்தாக்கள் மூலமும் அரசு மான்யம் மூலமும் சங்கத்திற்கான நிதி பெறலாம். சங்கத்தின் எல்லா வகையான வரவுகளுக்கும் சங்க நிர்வாகக்குழு பொறுப்பானதாகும். மேற்படி சங்க வரவு செலவினத்திற்கு சரியாக கணக்கு வைத்து உரிய ரசீதினை அளிக்க வேண்டியது நிர்வாக குழுவின் பொறுப்பாகும்.

சங்கத்தின் நிதியினை நிர்வாகக்குழு தீர்மானிக்கும் வங்கியில் போட்டு வைத்து தேவைப்படில் நிர்வாகக்குழு செய்யும் முடிவில் சங்க வளர்ச்சியை கருதி முதலீடு செய்யலாம்.

சங்க நிதியில் எந்த ஒரு பகுதியும் உறுப்பினர்களுக்கு பங்கு லாபம், போனஸ் போன்ற வகைகளில் பிரித்து தரப்படமாட்டாது. சங்கத்தில் எல்லா நிதியும் சங்க வளர்ச்சிக்காக மட்டுமே பயன்படுத்தப்படும்.

**29.சங்க சொத்து விபரம் :**

சங்கத்தின் பெயரில் தனிப்பட்ட சொத்து ஏதும் கிடையாது. சங்கத்தின் பெயரில் அசையும் / அசையா சொத்துகள் ஏதுமில்லை. பிற்காலத்தில் ஏதேனும் சொத்து வாங்கப்படின் சங்கத்தின் பெயரிலோ வாங்கப்படும் என்று உறுதியளிக்கிறேன்.

அவ்வாறு வாங்கப்படும் சொத்துக்களும், ஆஸ்திகளும் பெயரிலேயே இருக்க வேண்டும். அவ்வாறு சங்கத்திற்காக வாங்கப்படும் சொத்துக்களை விற்கவோ, அடமானம் வைக்கவோ வேண்டிய நிலை ஏற்பட்டால் அப்போது பொறுப்பில் இருக்கும் தலைவர் நிர்வாகக்குழுவின் எழுத்து மூலமான ஒப்புதலின் பேரில் செய்ய வேண்டியது. இது விஷயமாக சங்கத்தின் தலைவர் நிர்வாக குழுவுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

**30.நோக்கங்கள் (அ) விதிகளை திருத்தும் முறை :**

சங்கத்தின் நோக்கங்கள் அல்லது விதிகளை தமிழ்நாடு சங்க பதிவு சட்ட விதி 27/1975ல் 14ன் படி திருத்த மகாசபைக்கு அதிகாரம் உண்டு. இதன்படி மேற்படி திருத்த தீர்மானம் மகாசபையில் ஓட்டுரிமை பெற்றுள்ள உறுப்பினர்களில் வருகை புரிந்த 3/4 பங்கு உறுப்பினர்களின் ஆதரவு பெற்று நிறைவேற்றப்பட வேண்டும். மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நாளில் இருந்து 90 நாட்களுக்குள் சங்க பதிவாளருக்கு அனுப்பிவைத்து ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

சங்கத்தின் அலுவலகம் சங்க நிர்வாக வசதிக்காக தற்போது உள்ள இடத்தை விட்டு வேறு இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட நாளில் இருந்து ஒரு மாதத்திற்குள்

PRINCIPAL.
SS INSTITUTE OF PHARMACY
KUPPANUR (PO), SANKARI (TK),
SALEM - 637301

பதிவாளருக்கு படிவம் 5ல் கண்டுள்ள விபரங்களுடன் பதிவாளருக்கு தெரிவிக்க வேண்டும். சங்க ஆண்டு வருமானம் ரூ.10,000/- இருக்கலாம் என தீர்மானிக்கப்படுகிறது.

**31. சங்கத் தேர்தல் :**

சங்கத்தின் தேர்தல்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை டிசம்பர் மாதத்தில் நடைபெற வேண்டும். சங்க நிர்வாகக்குழுவில் ஒருமுறை பதவி வகித்தவர்களே மீண்டும் அதே பதவிக்கோ அல்லது சங்க நிர்வாகக் குழுவில் உள்ள வேறொரு பதவிக்கோ போட்டியிடலாம்.

**32.சங்கத்தினை கலைத்தல் :**

சங்கத்தின் சிறப்பு பொதுக்குழுவை கூட்டி 3/4 பங்கு உறுப்பினர்களின் ஆதரவின் பேரில் தீர்மானம் நிறைவேற்றி சங்கத்தினை கலைத்தல். சங்கத்தின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை இதே நோக்கமுடைய வேறொரு சங்கத்திற்கு ஒப்படைத்து விட்டு சங்கத்தினை கலைத்துக் கொள்ளலாம்.

33. சங்கத் தனிநிலைச் சட்ட விதிகளில் குறிப்பிடப்படாத இதர விஷயங்களுக்கு 1975-ஆம் வருட தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச்சட்டம் மற்றும் 1978-ஆம் வருட தமிழ்நாடு சங்கங்கள் பதிவு விதிகள் பொருந்தும்.

PRINCIPAL,
SS INSTITUTE OF PHARMACY
KUPPANUR (PO), SANKARI (TK),
Salem 637301

மேலே கண்ட சங்கத் தனிநிலைச் சட்ட விதி உண்மை நகல் என சான்றளிக்கப்படுகிறது.

| வ.எண். | உறுப்பினர் பெயர் | முகவரி | தொழில் | வகிக்கும் பதவி | கையொப்பம் |
|---|---|---|---|---|---|
| 1 | க.ஷபியுல்லா | எரிக்கரைத் தெரு, வடசிறுவள்ளூர், பாண்டலம் P.O விழுப்புரம் -606402 | மருத்துவக் குறியீட்டு முறை | தலைவர் | G.S[illegible] |
| 2 | ப.ஹரிவிஷ்வா | 13/73-1, பனமரத்துப்பட்டி, அடிக்கரை, சேலம்-636204 | மருந்தாளர் | துணைத் தலைவர் | P.[illegible] |
| 3 | அ.அப்துல் அஜிம் | 1/18B கோட்டை,பாளையங் கோட்டை, கடலூர் - 608701 | மருந்தாளர் | துணைத் தலைவர் | [illegible] |
| 4 | அ.ஆர்த்தி | ஆர்.அண்ணாமலை, முருகன் கோவில் தெரு, சதாபுதூர் சங்கராபுரம் விழுப்புரம்- 606206 | மருந்தாளர் | செயலாளர் | [illegible] |
| 5 | து.அருண் குமார் | டி. துரைசாமி, நடுத்தெரு, உப்பூர் சின்னசேலம், விழுப்புரம்- 606209 | மருந்தாளர் | இணைச் செயலாளர் | [illegible] |
| 6 | மு.தீபாஸ்ரீ | எம்.முத்துக்குமார், 99 ஏ, ஆத்துகாடு, கோரிமேடு, சேலம்-636008 | மருந்தாளர் | இணைச் செயலாளர் | M.[illegible] |
| 7 | சா.அருண் | சாமுவேல், கோச்சிகுட்டை பண்ணைக்கிணார், புதுப்பாளையம், உடுமலைப்பேட்டை, திருப்பூர் | குறியீட்டாளர் | பொருளாளர் | S.[illegible] |

PRINCIPAL,
SS INSTITUTE OF PHARMACY
[illegible]PANUR (PO), SANKARI (TK),
[illegible] - 637301

எங்கள் முன்னிலையில் இன்று ______________ ல் கையொப்பமிடப்பட்டது.

சாட்சிகள் :

கையொப்பம் :

1. ப. நந்திதா

2. மனிஷா.

PRINCIPAL

INSTITUTE OF PHARMACY.

KUPPANUR (PO)

SALEM

**படிவம் -5**

**(1978 ஆம் ஆண்டு சங்கங்களின் பதிவு விதிகள் விதி 15 ஐ காண்க) 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/1975) பிரிவு 13 உட்பிரிவு (1) இன் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இருக்குமிடம் / இருக்குமிடத்தில் ஏற்படும் மாற்றத்தைப் பற்றி அறிவிக்கப்படும் அறிவிப்பு**

1. சங்கத்தின் பெயர் : எஸ்.எஸ் மருந்தியல் கல்லூரி முன்னாள் மாணவர் சங்கம்,சேலம் மேற்கு.
2. சங்கத்தின் முகவரி : **NH 544, S.F.NO.213,** எஸ்.எஸ் மருந்தியல் கல்லூரி , மஞ்சக்கல்பட்டி, குப்பனூர், சங்ககிரி, சேலம்-**637301.**
3. சங்கம் தொடங்கிய நாள் : 21-10-2024
4. சங்க அலுவலக நேரம் : காலை **10** மணி முதல் மாலை **5** வரை
5. சங்கத்தின் பதிவு அலுவலக எல்லை : மாவட்டப் பதிவாளர், சேலம் மேற்கு

பெறுதல்
உயர்திரு சங்கங்களின் பதிவாளர் அவர்கள்,
சேலம் (மேற்கு) பதிவு மாவட்டம்,
சேலம் மாவட்டம்.

அய்யா,

**எஸ்.எஸ் மருந்தியல் கல்லூரி முன்னாள் மாணவர் சங்கம், சேலம் மேற்கு** என்ற சங்கமானது தங்களுக்கு தெரிவிக்கும் அறிவுப்பு. மேற்படி சங்கமானது 1975ம் வருடத்திய தமிழ்நாடு பதிவு சட்ட விதி 27க்கு உட்பட்டு உபவிதி 1(பிரிவு 13ன் படி ) தற்போதைய முகவரி **NH 544, S.F.NO.213, எஸ்.எஸ் மருந்தியல் கல்லூரி , மஞ்சக்கல்பட்டி, குப்பனூர், சங்ககிரி, சேலம்-637301.**

**இப்படிக்கு,**

**(தலைவர்)**

PRINCIPAL.
SS INSTITUTE OF PHARMACY.
KUPPANUR, SANKARI (TK).
SALEM - 637301.

படிவம் -6

**(1978 ஆம் ஆண்டு சங்கங்களின் பதிவு விதிகள் விதி 16 ல் காண்க)1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/1975) பிரிவு 14 உட்பிரிவு (1) இன் கீழ்ப் பராமரித்து வர வேண்டிய உறுப்பினர்களின் பதிவேடு**

**சங்க உறுப்பினர்களின் பட்டியல்**

| | | |
|---|---|---|
| 1. | சங்கத்தின் பெயர் | : எஸ்.எஸ் மருந்தியல் கல்லூரி முன்னாள் மாணவர் சங்கம்,சேலம் மேற்கு. |
| 2. | சங்கத்தின் முகவரி | : **NH 544, S.F.NO.213,** எஸ்.எஸ் மருந்தியல் கல்லூரி , மஞ்சக்கல்பட்டி, குப்பனூர், சங்ககிரி, சேலம்-**637301.** |
| 3. | சங்கம் தொடங்கிய நாள் | : 21-10-2024 |
| 4. | சங்க அலுவலக நேரம் | : காலை **10** மணி முதல் மாலை **5** வரை |
| 5. | சங்கத்தின் பதிவு அலுவலக எல்லை | : மாவட்டப் பதிவாளர், சேலம் மேற்கு |

PRINCIPAL
SS INSTITUTE OF PHARMACY.
KUPPANUR (PO), SANKARI (TK).
SALEM (DT)

| வ.எண். | உறுப்பினர் பெயர் | முகவரி | தொழில் | சேர்க்கப்பட்ட தேதி | நீக்கப்பட்ட /நீங்கிய தேதி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | க.ஷபியுல்லா | எரிக்கரைத் தெரு, வடசிறுவள்ளூர், பாண்டலம் P.O விழுப்புரம் -606402 | மருத்துவக் குறியீட்டு முறை | 21/10/2024 | | |
| 2 | ப.ஹறிவிஷ்வா | 13/73-1, பனமரத்துப்பட்டி, அடிக்கரை, சேலம்-636204 | மருந்தாளர் | 21/10/2024 | | |
| 3 | அ.அப்துல் அஜிம் | 1/18B கோட்டை,பாளைய ங்கோட்டை, கடலூர் - 608701 | மருந்தாளர் | 21/10/2024 | | |
| 4 | அ.ஆர்த்தி | ஆர்.அண்ணாமலை, முருகன் கோவில் தெரு, சதாபுதூர் சங்கராபுரம் விழுப்புரம்- 606206 | மருந்தாளர் | 21/10/2024 | | |
| 5 | து.அருண் குமார் | டி. துரைசாமி, நடுத்தெரு, உப்பூர் சின்னசேலம், விழுப்புரம்- 606209 | மருந்தாளர் | 21/10/2024 | | |
| 6 | மு.தீபாஸ்ரீ | எம்.முத்துக்குமார், 99 ஏ, ஆத்துகாடு, கோரிமேடு, சேலம்-636008 | மருந்தாளர் | 21/10/2024 | | |
| 7 | சா.அருண் | சாமுவேல், கோச்சிகுட்டை பண்ணைக்கிணார், புதுப்பாளையம், உடுமலைப்பேட்டை, திருப்பூர் | குறியீட்டாளர் | 21/10/2024 | | |

மேலே கண்ட யாவரும் மேற்படி சங்கத்தின் உறுப்பினர்களின் பட்டியலில் உண்மை நகல் என உறுதி அளிக்கிறேன்.

இடம்: சங்ககிரி.
நாள்: 21.10.24.

தங்கள் உண்மையுள்ள
(தலைவர்)

PRINCIPAL
...S INSTITUTE OF PHARMACY,
...IPPANUR (PO), SANKARI (TK),
SALEM - 637301